மின் பொறியாளர், பொ.ப.து., மின் கோட்டம், கோவை
அவர்களின் செயல்முறைகள்
****
முன்னிலை : திரு.செ. மோகன், பி.இ.,
மின் பொறியாளர், (கூ.பொ) பொ.ப.து.,
****

செ.மு.ஆணை எண். கோ 1 / 305 / 2018 / நாள். 25.10.2018.

பொருள்: நிறுவனம் -த.நா.அ.ப. தொகுதி - திரு. கோ. ஜெகதீஸ்வரன் , இளநிலை உதவியாளர் பணியேற்ற நாள் 03.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்தி - தகுதிகாண் பருவம் துவங்குதல் - தொடர்பாக.

பார்வை
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் , சென்னை -3 அவர்களின் கடித எண் 5428 / பி.எஸ்.டி / எச் 2 / 2017 / நாள் 26.09.2017
2. முதன்மை தலைமைப்பொறியாளர், (கட்டடம்) தலைமைப்பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து சேப்பாக்கம் , சென்னை -5 அவர்களின் செயல்முறை ஆணை எண் எஸ் 3(1) / 34252 / 2017 - 1 / நாள் 27.10.2017
3. தலைமைப்பொறியாளர் (கட்டடம்) திருச்சி மண்டலம் , திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண் நிஉ / 4779 / 2017-27 /நாள் 30.10.2017
4. கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து, (மின்) அவர்களின் செயல்முறை ஆணை எண் 870 / 17-7/ க.கா. நாள் 01.11.2017
5. மின்பொறியாளர், பொபது , மின்கோட்டம், கோவை அவர்களின் செயல்முறை ஆணை எண் நிஉ / 360-3 / 2017 நாள் 03.11.2017.

--------------

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின் படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2015-16 போட்டி தேர்வில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திரு. கோ. ஜெகதீஸ்வரன் , 03.11.2017 முற்பகல் முதல் மின்உபகோட்டம், ஈரோட்டில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

இத்தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசு சார்நிலைப்பணி விதி 23 (அ) மற்றும் அரசாணை எண் 191/ பொபது / நாள் 01.02.1962ன் படி இவர் பணியேற்ற நாளான 03.11.2017 முப பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 03.11.2017 முப முதல் தொடர் மூன்று ஆண்டுகள் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும் எனவும், இத்தகுதிக்காண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு பணியாளர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் சார்நிலை அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெறல் வேண்டும் என்ற நிபந்தனையுடன் மற்றும் தனியருக்கு வழங்கப்பட்ட இப்பணி நியமனமாற்று சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மின்பொறியாளர், (கூ.பொ)பொ.ப.து,
மின்கோட்டம், கோவை

பெறுநர்
திரு. கோ. ஜெகதீஸ்வரன் , இளநிலை உதவியாளர்,
மின்உபகோட்டம், ஈரோடு
(வழி) உதவிசெயற்பொறியாளர், மின்உபகோட்டம், ஈரோடு வழியாக

நகல் உதவிசெயற்பொறியாளர், மின்உபகோட்டம், ஈரோடு
நகல் பணிபதிவேட்டிற்கு

உரியவர்களுக்கு வழங்கப்படுகிறது

உதவி செயற்பொறியாளர்
பொ.ப.து, மின் உபகோட்டம்
ஈரோடு - 11.